Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 319

புதன்கிழமை 11 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


# இலங்கையின் மீட்சி இன்னும் உறுதியில்லை!

## பொருளாதார மாநாட்டில் நாணய நிதியம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

இலங்கையின் பொருளாதார மீட்சி இன்னும் உறுதிப்படுத்தப்பட வில்லை. ஆனால், இதுவரை முன்னெடுத்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பயனளிக்க ஆரம்பித்துள்ளன என்று சர்வதேசநாணய நிதியத்தின் பிரதானிகளில் ஒருவரான டானியல் லீ தெரிவித்துள்ளார்.

»15

# தென்னையிலிருந்து வீழ்ந்தவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 11

தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த நபரொருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த பொன்னுத்துரை கணேசலிங்கம் (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் கடந்த 6ஆம்

»15

## மாட்டுடன் மோதியதில்

# மோ.சைக்கிளில் பயணித்த பெண்ணொருவர் சாவு!



வவுனியா, ஒக். 11

வவுனியா, பம்பைமடு பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார். விஜயரத்தினம் ஜெயந்தினி (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

புதுக்குளத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த

»15

# முல்லை. சட்டத்தரணிகள் பணிகளுக்குத் திரும்பினர்

முல்லைத்தீவு, ஒக். 11

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா அச்சுறுத்தப்பட்ட விவகாரத்தில், முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் முன்னெடுத்த

»15

## தேசிய கால்பந்தாட்டத் தொடர்

# சென்.பற்றிக்ஸ் சம்பியனானது!

## வரலாற்றுச் சாதனையாகப் பதிவு

யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவில், சென். பற்றிக்ஸ் அணி கிண்ணம் வென்றது.

»15

## இந்திய இராணுவத்தின்

# பிரம்படிப் படுகொலை: நினைவேந்தல் நாளை!

விரிவு- பக்.15

## முதல் பெண் மாவீரர்

# இரண்டாம் லெப். மாலதிக்கு தாயகத்தில் நினைவேந்தல்!

கொழும்பு, ஒக். 11

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் பெண் மாவீரரான இரண்டாம் லெப்டினன்ட் மாலதி எனப்படும், பேதுருப்பிள்ளை சகாயசீலியின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாக முன்னெடுக்கப்பட்டது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் நேற்று மாலதியின் நினை

»15












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காசாவில் சரமாரியாக

# அப்பாவி மக்கள் மீது பொஸ்பரஸ் தாக்குதல்

போர்க்குற்றத்தில் ஈடுபடும் இஸ்ரேல்

ஊடகங்கள் ஆதாரத்துடன் குற்றச்சாட்டு



**டெல்அவிவ், ஒக். 11**

**காசாவில் பொதுமக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில், இஸ்ரேல் பொஸ்பரஸ் குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றது என்று சர்வதேச ஊடகங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.**

ஹமாஸ் போராளிகள் கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது எதிர்பாராத தாக்குதலை நடத்தினார்கள். இதையடுத்து இந்தத் தாக்குதல்களுக்கு அரக்கத்தனமாகப் பதிலடிகொடுத்து வருகின்றது இஸ்ரேல். கடந்த மூன்று நாள்களாக ஒரு மணிநேர இடைவேளையின்றி காசா மீது இஸ்ரேலின் ஷெல் தாக்குதல்கள் தொடர்கின்றன. இந்த நிலையில் தடைசெய்யப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளைப் பயன்படுத்தியும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியமை தெரியவந்துள்ளது.

**தாக்கம் என்ன?**

வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகள் வெடித்தவுடன் சடுதியாக 800 டிகிரி வெப்பநிலையை ஏற்படுத்தும். ஆதலால் இவற்றை வெட்டை வெளிகளில் மட்டுமே பயன்படுத்த ஐ.நா. அனுமதிக்கின்றது. ஆள்கள் குறைவாகவேனும் இருக்கும் இடங்களில் இவற்றைப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்தினால் பொதுமக்கள் கும்பல் கும்பலாகத் தீக்கா யுத்துக்கு ஆட்படுவார்கள்.

பூமியில் மிகவும் நெரிசலான இடங்களில் ஒன்றாக காசா சொல்லப்படுவதுண்டு. இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் சுமார் 362 சதுர கிலோமீற்றர் மட்டுமே உள்ள காசா நிலப்பரப்பில் நெரிசலில் வசிக்கின்றனர். இதனிடையேதான், காசாவின் நெரிசலான இடங்களைக் குறிவைத்து வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மிருகங்களுடன் போரிடுகிறோம்!

## காசா மோதல் தொடர்பில் இஸ்ரேல் மிரட்டல் தொனி



டெல்அவிவ், ஒக். 11

காசா பகுதியை இஸ்ரேல் முற்றாக முற்றுகையிட்டுள்ளது. நாங்கள் மனிதர்களுடன் சண்டையிடவில்லை. மிருகங்களுடன் மோதுகின்றோம். எனவே, அதற்கேற்பதான் நடந்துகொள்ள முடியும் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காசா பகுதியை முழுமையாகக் கைப்பற்றுமாறு இஸ்ரேலியப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. காசா பகுதியை நாங்கள் முழுமையாக முற்றுகையிட்டுள்ளோம். அப்பகுதி அனைத்தும் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு மின்சாரம், உணவு, குடிதண்ணீர், எரிவாயு என எதுவும் கிடைக்க அனுமதிக்கப்போவதில்லை. எல்லாம் முடக்கப்பட்டுள்ளன. நாங்கள் மனிதர்களுடன் சண்டையிடவில்லை. மிருகங்களுடன் மோதுகிறோம். எனவே, அதற்கேற்ப தான் நடந்துகொள்ள முடியும் - என்றார்.

இஸ்ரேலியப் பிரதமர் நெதன்யாகுவும், காசா தாக்குதல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார். இஸ்ரேல் போரில் ஈடுபட்டுள்ளது. போரை நாங்கள் விரும்பவில்லை. மிகவும் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான முறையில் அது எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. போரை நாங்கள் தொடங்கவில்லை என்றாலும் நாங்கள் அதனை முடித்துவைப்போம். எங்களைத் தாக்கியதன் மூலம் மிகப்பெரிய வரலாற்றுப் பிழையை ஹமாஸ் செய்துவிட்டது. இதை நாங்கள் அவர்களுக்குப் புரியவைப்போம். இன்னும் பல தசாப்தங்களுக்கு ஹமாஸ்களும் இஸ்ரேலின் பிற எதிரிகளும் நினைவில் வைத்திருக்கும் அளவுக்கு சரியான விலையை நாங்கள் கொடுப்போம் என்று தெரிவித்தார். (ம)

# பெரமுனவின் கதவு திறந்தே உள்ளது!

நாமல் தெரிவிப்பு

பொதுஜன பெரமுனவின் கதவு திறந்தே உள்ளது. கட்சிக்குள் எவரும் வரலாம். எவரும் வெளியேறலாம் என்று தெரிவித்துள்ளார் நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியில் இருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுபவர்கள் கட்சிக்குள் வரவிரும்பினால் அது தொடர்பில் அவர்கள் முடிவெடுக்கலாம். பேச்சு நடத்துவதற்காக எமது கட்சியின் கதவு திறந்தே உள்ளது. 45 வருடகாலமாக அரசியலில் எதிரும், புதிருமாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோரால் இணைந்து செயற்பட முடியுமென்றால், 45 வருடகாலமாக எனது தந்தையுடன் இருந்தவர்களுடன் பேச்சு நடத்துவதில் பிரச்சினை இருக்காது என்றே நான் நினைக்கின்றேன்.

அதேவேளை பொதுஜன பெரமுனக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை என விமர்சனம் முன்வைக்கப்பட்டுவந்தது. ஆனால், இன்று தம்மிக்க பெரேரா கூட போட்டியிட தயார் என அறிவித்துள்ளார். கட்சி சிறந்த மட்டத்தில் உள்ளது என்பதற்கு இது சான்றாகும். பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை கட்சி ஆதரவாளர்களும், செயற்பாட்டாளர்களும்தான் உரிய நேரத்தில் தீர்மானிப்பார்கள் - என்றார். (ம-44)

தமிழகத்தில் இருந்து

# தாயகம் திரும்பிய மூவர்; பரு. பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்து 33 ஆண்டுகள் வாழ்ந்து வந்த நிலையில், கடல் வழியாக தாயகம் திரும்பிய வடமராட்சி கிழக்கு - குடத்தனையைச் சேர்ந்த மூவரை பருத்தித்துறை பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

தமிழர் தாயகப் பகுதியில் நிலவிவந்த போர் காரணமாக ஏற்பட்டிருந்த போர்ச் சூழலின்போது குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது இரு பிள்ளைகளும் 1990ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்று சுமார் 33 ஆண்டுகள் வாழ்ந்துவந்த நிலையில் தற்போது தாயகம் திரும்பியுள்ளனர். இதன்போதே அவர்கள் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களை சட்டநடவடிக்கைக்குட்படுத்தும் முன்னெடுப்புகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-100)

## கருத்துரை

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் பொதுநூலகத்தினரின் ஏற்பாட்டில் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலையில் இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துரை நடைபெறவுள்ளது. (ச-66)

# இஸ்ரேலில் இலங்கைப் பெண் பலி!

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதலில் நேற்று முன்தினம் காணாமற்போனதாகக் கூறப்பட்ட இலங்கைப் பெண் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பெண் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுவதாக அவர் தெரிவித்தார். குறித்த பெண் [illegible]வைச் சேர்ந்த 49 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாவார். இஸ்ரேலின் இராஜதந்திர தலையீட்டின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டுவர முடியும் என நம்புவதாக காமினி செனரத் யாப்பா தெரிவித்தார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீண்டும் வரவுள்ள ஐ.எம்.எப்.



கொழும்பு, ஒக்.11

**சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணயநிதியத்தின் வருடாந்த மாநாடு மொரோக்கோவின் மரகே நகரில் நடைபெற்று வருகின்றது. இந்த மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு சென்றுள்ளது. இந்த மாநாட்டின் பின்னர் சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கான கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு தொடர்பான மேலதிக கலந்துரையாடல்களுக்காகவே இந்தக் குழு இலங்கை வரவுள்ளது. (எ-இ)

## வெளியேறிய எம்.பி.க்கள் மீது வெகுவிரைவில் நடவடிக்கை

### பெரமுன கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஒக்.11

அமைச்சர் நஷீர் அஹமட் விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பொதுஜன பெரமுனவின் கட்சிக்கொள்கைக்கு எதிராகச் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொரோனா பெருந்தொற்றுத் தாக்கத்தின்போது பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்காமல் நாட்டு மக்களின் சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கியதால் பொருளாதாரப் பாதிப்புத் தீவிரமடைந்தது. பொருளாதாரப் பாதிப்பை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றினார்கள்.

நாடு தற்போது சமூக மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமைக்கு ஜனநாயகப் போராட்டம் என்ற பெயரில் இடம்பெற்ற அரகலயவே பொறுப்புக் கூறவேண்டும். போராட்டத்தின் காரணமாகவே நாடாளுமன்றத்தில் ஒற்றை ஆசனத்தில் இருந்தவர் ஜனாதிபதியாகினார்.

பூகோளப் பாதிப்புக்கு மத்தியில் யார் மக்களைப் பாதுகாத்தார்கள், நெருக்கடியான சூழ்நிலையை யார் தமது குறுகிய அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

சுற்றாடல் துறை அமைச்சர் நஷீர் அஹமட் விவகாரத்தில் உயர்நீதிமன்றம் முன்மாதிரியான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு முரணாக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச்செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரியுள்ளோம். வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று நாடாளுமன்றஉறுப்பினர் தம்மிக பெரேரா குறிப்பிட்டுள்ளார். இது அவரது தனிப்பட்ட தீர்மானமே தவிர கட்சியின் தீர்மானமல்ல. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பரந்துபட்ட பேச்சில் ஈடுபட்டுள்ளோம் -என்றார். (எ-இ)

## புதிய பொலிஸ்மா அதிபரை உடனே நியமிக்கவேண்டும்

### வலியுறுத்துகிறார் பீரிஸ்

கொழும்பு, ஒக்.11

அரசாங்கத்தின் உள்ளக முரண்பாடுகள் காரணமாக பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. சி.டி.விக்கிரமரத்னவுக்கு சேவை கால நீடிப்பு வழங்காமல் அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடன் புதிய பொலிஸ்மா அதிபரை உடனடியாக நியமிக்கவேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. கொலை, கொள்ளை மற்றும் மனிதக் கடத்தல் ஆகியன பகிரங்கமாகவே இடம்பெறுகின்றன. நிறைவடைந்த ஒன்பது மாத காலத்துக்குள் மட்டும் 80க்கும் அதிகமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்கள் பதிவாகியுள்ளன. 40க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

சமூகக் கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ் தரப்புக்கு கட்டளை பிறப்பிக்க நிலையான ஒரு தலைமைத்துவம் இல்லாத நிலை காணப்படுகிறது. பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் நிறைவடைந்ததன் பின்னர் அவருக்கு ஆறுமாத கால சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட இரண்டாவது சேவை நீடிப்புக் காலம் நிறைவடைந்துள்ளது. அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடன் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது இழுபறியிலேயே உள்ளது. அரசாங்கத்தின் உள்ளக முரண்பாடுகளாலே இது இழுபறியில் உள்ளது. புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்காமல் ஓய்வு பெற்றவருக்கு தொடர்ந்து சேவை நீடிப்பு வழங்குவது அரச நிர்வாகக் கட்டமைப்பின்மீதான மக்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்தும் - என்றார். (எ-இ)



## புதினம் தெரியுமோ?

**மீ**டியா எண்டது ஒரு புனிதமான வேலை. அதில எங்கட சொந்த விருப்பு, வெறுப்புகளைத் தூக்கி வைச்சிட்டு சனத்துக்காக, உண்மைக்காக பாடுபடவேணும். ஆனால் சிலர் தங்களுக்கு என்னென்ன தேவையோ அதெல்லாத்தையும் அடையிறதுக்குத்தான் 'நாங்களும் மீடியாக்காரர்' எண்ட வேசத்தில திரியினம். அப்பிடி ஒருத்தர் கிளிநொச்சியில இருக்கிறார். அமைதிப்படை படத்தில 'சோழர் பரம்பரையில ஒரு எம்.எல்.ஏ.' எண்டு சத்தியராஜ சொல்லுவார். அதைமாதிரி 'சங்கரி பரம்பரையில ஒரு மீடியாக்காரர்' அவர். கிளிநொச்சியை ஒரு மாவட்டமா உருவாக்கினதில சங்கரியாருக்குப் பெரிய பங்கிருக்கு. அதைமாதிரி மாவட்டமாக்கேக்கையே தனக்கும் தன்ர பரம்பரைக்கும் அங்க பங்குகளை அவர் எடுக்கத் தவறேலை.

அப்பிடி அவர் துண்டுபோட்டு முறிகண்டியில பிடிச்சுவைச்ச காணியில, சண்டைக்காலத்தில இடம்பெயர்ந்து வந்த சனத்தை இயக்கம் இருத்தினது. அப்ப ஆரின்ர பேரில காணி உறுதி இருந்திச்சோ அவை பம்மிக்கொண்டுதான் இருந்தவை. அந்தக் காணிக்கு உரியவர் இப்ப மீடியாக்காரர் எண்ட பேரில ஆமியின்ர சப்போர்ட்டோட அங்கயிருந்த சனத்தைக் கலைச்சிட்டு, காணியைத் திரும்பவும் தன்ர கையுக்க கொண்டந்திட்டார். ஆனால் அந்தக் காணியில இருந்த சனம் ஒரு கோயிலைக் கட்டி ஆதரிச்சு வந்தது. எல்லாத்துக்கும் 'சப்தம்' போடுற அந்த மீடியாவேசதாரியால கோயில காணிக்கை யிருந்து அவ்வளவு ஈஸியா எடுக்கமுடியேலை. ஒருமாதிரி கோர்ட்ஸில வழக்கெல்லாம் நடந்தது. கோயிலுக்கு ஒரு குறிப்பிட்ட துண்டு காணியைக் குடுத்திட்டு மிச்சத்தை அவர் எடுக்கலாம் எண்டு தீர்வொண்டு வந்தது. ஆனால் 'எனக்கு முழுக்காணியும் வேணும், ஒரு துண்டுகூட கோயி லுக்கு குடுக்கமாட்டன்' எண்டு ஒற்றைக்காலில நிண்டார் அந்த கபடமீடியாதாரி. ஆனால் சனமும், கோயில்காரரும் அதுக்கு விடேலை.

இப்ப என்னடாவெண்டால், அந்தக் கோயில் காணிக்குள்ள புத்தர் சிலையை வைக்க அந்தக் கபட மீடியாக்காரர் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். கிட்டடியில அவர் புத்தர் சிலையை வைக்க வெளிக்கிட சனமெல்லாம் கொந்தளிச்சு போராடினதால அண்டைக்கு அதை வைக்கேலை. ஆனால் அந்தக் காணிக்குள்ள புத்தர் சிலையை வைச்சு, விகாரையைக் கட்டுவன் எண்டு அழுங்குப் பிடியில நிக்கிறாராம் அந்தக் கபட மீடியாக்காரர்.

எல்லா இடத்திலையும் புத்தரின்ர பேரால நடக்கிற காணிவிழுங்கலை சனத்துக்கு தெரியப்படுத்தி, அதை எதிர்க்கிற வேலையை எல்லா மீடியாக்காரரும் செய்துகொண்டிருக்கேக்க, இந்தக் கோடரிக்காம்பு மீடியாக்காரர் என்னடா வெண்டால் முறிகண்டியில புத்தரை வெத்திலை பாக்கு வைச்சு கூப்பிடுறார். கோயில் தன்ர காணிக்குள்ள இருக்கக்கூடாது எண்டுபோட்டு, விகாரையைக் கட்ட தன்ர காணியைக் குடுக்கிற இவையை மாதிரி ஆக்கள் இருந்தால், கிட்டடியில பலஸ்தீனத்தை இஸ்ரேல் முழுக்க பிடிச்சமாதிரி எங்கட இடங்களும் பறிபோறது உறுதி பாருங்கோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து இறக்குமதியில் கிளம்பியது சர்ச்சை!



கொழும்பு, ஒக்.11

**இலங்கை சுகாதார அமைச்சு தற்போது பயன்பாட்டிலிருந்து நிறுத்தி வைத்துள்ள இம்யுனோகுளோபலின் மருந்து தங்களால் அனுப்பப்படவில்லை என்று இந்திய நிறுவனம் மறுத்துள்ள நிலையில், அந்த மருந்து எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்ற கேள்விகள் எழுந்துள்ளன.**

இலங்கையில் தற்போது சுகாதார அமைச்சு பயன்பாட்டிலிருந்து நிறுத்திவைத்துள்ள இம்யுனோகுளோபலின் மருந்தை இந்திய நிறுவனம் ஒன்றால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த நிறுவனம் அதை மறுத்துள்ளது.

இந்திய நிறுவனம் இலங்கையின் மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இந்த மருந்தை உற்பத்தி செய்தது யார்? இலங்கை இறக்குமதியாளர் யார்? இந்தியாவின் எந்தத் துறைமுகத்திலிருந்து இந்த மருந்துகள் வந்தன? இலங்கையின் எந்தத் துறைமுகத்துக்கு வந்தன? என்ற விவரங்களை அந்த நிறுவனம் கோரியுள்ளது.

உண்மையான மருந்து ஏற்றுமதியாளர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும் மிக முக்கியமாக விலைமதிப்பற்ற உயிர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இத்தகைய மோசடி நிறுவனங்களை இனம்கண்டு நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும், இந்தியாவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடம் இது தொடர்பாக உத்தியோகபூர்வ முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது என்றும் அந்த இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## தென்மராட்சியில் ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 11

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் ஆசிரியர் தின நிகழ்வு நாளைமறுதினம்வெள்ளிக்கிழமை கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி நிர்வாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ள னர். (ச-159)

## இலங்கைக்கு கடத்தத் திட்டமிடப்பட்ட வலி மாத்திரைகள் தமிழகத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான வலி மாத்திரைகள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துப் போத்தல்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோத கடத்தல் சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலை அடுத்து இராமநாதபுரம் அடுத்துள்ள பெருங்குளத்தில் உள்ள வீடு ஒன்றில் கடற்கரையோர பொலிஸார் நடத்திய அதிரடி சோதனை நடத்தியிருந்தனர்.

இதன்போது இலங்கைக்கு படகு மூலம் சட்டவிரோதமாக கடத்துவதற்காக குறித்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த சுமார் 3 இலட்சம் ரூபா மதிப்பிலான (இந்தியபெறுமதி) 60 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் மற்றும் 200 பூச்சி கொல்லி மருந்துப் போத்தல்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் பைசல் கான் என்பவரை கைது செய்துள்ளனர்.

வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கையில் போதை மாத்திரையாக பயன்படுத்தப்படுவதால்தமிழ்நாட்டில் இருந்து இந்த மாத்திரைகள் இலங்கைக்கு கடத்தப்படுவதாக தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-100)

## சடலம் மீட்பு

யாழ்., ஒக். 11

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பாழடைந்த கட்டடத்திலிருந்து நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை அடையாளம் காணவும் இறப்புக்கான காரணங்களைக் கண்டறியவும் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ-26)

## சடலத்தைப் பொறுப்பேற்க

யாழ்ப்பாணம், ஒக். 11

நெடுந்தீவு 15ஆம் வட்டாரத்தில் உள்ள குயின்ஸ் கோபுரப்பகுதியில் இருந்து அண்மையில் சடலமொன்று மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், உரியவர்கள் அந்தச் சடலத்தைப் பொறுப்பேற்க முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் உரிமை மீறல்கள் இல்லையாம்

### முட்டுக்கொடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.11

நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவு சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமே தவிர ஊடகங்களை அடக்குவதற்கு கொண்டுவரப்படுவதல்ல. அதேநேரம், மனித உரிமைகளை மீறக்கூடிய எந்த விடயங்களும் அதில் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவைக் கொண்டுவந்து ரணில் விக்கிரமசிங்க மக்களின் மனித உரிமையை மீறி இருப்பதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலரும் பொய்ப்பரப்புரைகளைச் செய்து வருகின்றனர்.

ஆனால் வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாட்டை ரணில் விக்கிரம சிங்க பொறுப்பேற்காமல் விட்டிருந்தால் இவர்கள் யாரும் நாட்டில் இருந்திருக்கவே மாட்டார்கள்.

நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு சமூகவலைத்தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கே கொண்டுவரப்படுகிறது. இதனால் சமூக வலைத்தளங்களின் மூலம் ஏற்படுகின்ற குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்தச் சட்டத்தின் ஊடாக ஊடகங்களுக்கு தடைகளை ஏற்படுத்தவோ சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை.

சமூகவலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் செய்திகளுக்கு வகைபொறுப்பு ஏற்படுகிறது - என்றார். (எ-இ)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** இழுபறியாக இருந்த காரியங்கள் எதிர்பாராதவகையில் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வழியில் சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்படலாம். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் துணிச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும்.

**மகரம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்து நீண்டகாலமாகத் திரும்பவராத கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும்முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு நடைபவனி நேற்று!



யாழ்ப்பாணம், ஒக். 11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவின் ஓர் அங்கமான நடைபவனி நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்திலிருந்து ஆரம்பமாகி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நிறைவடைந்தது.

நடைபவனியின் சிறப்பம்சமாக கலாசாலையின் பழையமாணவர்களால் தயாரிக்கப்பட்ட கலாசாலையைப் பிரதிபலிக்கும் ஊர்திப் பவனியும் இடம்பெற்றது.

ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடைபவனியில் கலாசாலையின் பிரதி அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விசாரா பணியாளர்கள், கலாசாலையில் பயிற்சிபெற்று இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வருகைதந்த பழையமாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-20)


# INVITATION FOR BID

## PSDG - 2023

### Manthai East Pradeshiya Sabha – Pandiyankulam

1) The Chairman, Local Authority Procurement Committee on behalf of Manthai East Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.
2) Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.
3) To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Road and Building for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).
4) Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
5) Interested bidders may obtain further information from *Chairman, Procurement committeeManthai East Pradeshiyasabha.-Pandiyankulam (Te.No-021 228 3475, Fax No-021 228 3476)* and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 14.00 hrs from 2023.10.11 till 2023.10.25
6) A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the *Manthai East Pradeshiyasabha.* From 2023.10.11 until 2023.10.25 from 09.00 hrs to 14.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.2,000.00. The method of payment will be by cash.
7) Bids shall be delivered of Original and duplicate to the address *Secretary,Manthai East Pradeshiyasabha on* or before 14.30 hrs on 2023.10.25 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S. No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44/(02)/02/PSDG/2023/02 | Pandiyankulam Preschool Tube well and Toilet Bathroom | PSDG | 1.609 | 90 Days | C9/C8 | 49 Days | 2023.12.13 | 25,000.00 | 2024.01.10 |
| 02 | NP/14/44/(02)/02/PSDG/2023/03 | Purchasing of Solar Street light & Street Light | PSDG | 0.616 | 30 Days | Business registration | 49 Days | 2023.12.13 | 10,000.00 | 2024.01.10 |
| 03 | NP/14/44/(02)/02/PSDG/2023/04 | Renovation of Ambalpuram 7th Lane Road | PSDG | 0.852 | 60 Days | C9/C8 | 49 Days | 023.12.13 | 13,000.00 | 2024.01.10 |
| 04 | NP/14/44/(02)/02/PSDG/2023/05 | Renovation of Karumpulliyan 6th Lane | PSDG | 0.865 | 60 Days | C9/C8 | 49 Days | 2023.12.13 | 13,000.00 | 2024.01.10 |

Bid security is as following table

**Bid invitation table**

8 Pre bid meeting will be held on 2023.10.18 at 14.30 in Manthai East Pradeshiyasabha ,Pandiyankulam. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.

9 The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

Chairman,
Local Authority Procurement Committee
Manthai East PradeshiyaSabha,Pandiyankulam
2023.10.11


# மன்னாரைச் சேர்ந்த இருவர் தமிழகத்துக்குள் ஊடுருவல்!

## மோப்பநாய் சகிதம் தீவிர தேடுதல்

சென்னை, ஒக். 11

தமிழகம் மண்டபம் பகுதியூடாக மன்னாரைச் சேர்ந்த இருவர் தமிழகத்துக்குள் ஊடுருவியுள்ளனர் என்றும், மோப்பநாய்களின் உதவியுடன் அவர்கள் தேடப்பட்டு வருகின்றனர் எனவும் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் மன்னாரைச் சேர்ந்த படகொன்று நங்கூரமிடப்பட்டுள்ளமை நேற்றுக்காலை அவதானிக்கப்பட்டதையடுத்தே தீவிர தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தேகத்துக்கிடமான அந்தப் படகு கடற்பகுதியூடாக அதிவேகமாக ஊடுருவதை மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் அவதானித்து வீடியோவாகப் பதிவுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அந்த வீடியோப் பதிவுகளின் அடிப்படையிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையிடமிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ம-100)

# தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் நிர்வாகத் தெரிவு

சாவகச்சேரி, ஒக். 11

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பொதுச்சபைக்கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் கழகத்தின் ஐக்கிய இராஜ்ஜியக் கிளையின் தலைவர் மருத்துவர் புவிநாதன் விருந்தினராக பங்கேற்றார். கழகத்தின் புதிய தலைவராக முன்னாள் அதிபர் அ.கயிலாய பிள்ளை, உபதலைவராக வ.ஸ்ரீபிரகாஷ், செயலாளராக சஞ்சயன், பொருளாளராக ஆசிரியர் சி.சுகாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் 21 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'எறும்பு விட்ட வினாத்தாள்' கவிதை தொகுப்பு வெளியீடு

மன்னார், ஒக். 11

கவிஞர் ஆனந்தன் லியோன் எழுதிய 'எறும்பு விட்ட வினாத்தாள்' என்ற கவிதைத் தொகுப்பு புத்தக வெளியீடு கடந்த சனிக்கிழமை மன்னார் பேசாலையில் இடம் பெற்றது.

விழிகள் கலாமுற்ற இயக்குநர் 'சாஹித்தியா' எஸ்.ஏ.உதயன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி செபமாலை அன்ரனி அடிகளார், ஓய்வுநிலை அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ், மருத்துவக் கலாநிதி கில்றோய் பீரிஸ், வெளிநாட்டு அலுவலக அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி நிஷாந்தினி சுரேன் நாத் மற்றும் மடு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வாசுகி சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-60)

## ஏல விற்பனை

அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட 1 ½" விட்டம் கொண்ட 80 கல்வனேஸ் குழாய்கள் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது.

காலம் : 15.10.2023 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 10 மணி (காலை )
இடம் : ஆலய முன்றல்.

(CR 40753) (M-1)

தொடர்பு -077 1621953
077 3743201

ஆலய பரிபாலன சபை,
அல்லாரை தெற்கு,
மீசாலை.

## வேலைவாய்ப்பு

கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற நிறுவனம் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் அதன் செயற்பாடுகளுக்காக பின்வரும் வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

- Cashier
- Stores Supervisor
- Stores Helpers
- Invoicing Clerks

தகுதியுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை கல்வித்தகுதி, வேலை அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு, பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அல்லது தபால் மூலம், இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் அனுப்பவும்

recruitments@nvclgroup.com

No. 70, K. Cyril C Perera Mawatha, Colombo 13

(CS 26459) M-1

## கண்ணீர் அஞ்சலி

திரு.சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி
கட்சியின் பிரதிச் செயலாளர்
திருமதி உமாசந்திரா பிரகாஸ்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலுப்பிள்ளை செல்வநாயகம்

அவர்கள் 08.10.2023 அன்று இறைபதமடைந்தார்
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

சாவகச்சேரி நகர்
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

(CS 40744) (AK.1)

## மணமகள் தேவை

01. இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1990, அனுஷம், Quantity Surveyor, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சுதுமலை, இந்து, கௌரவகுலம் (V), 1975, மிருகசீரிடம், BA Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. கந்தரமடம், இந்து, கௌரவகுலம் (V), 1989, உத்தராடம், MSc, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
04. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1988, உத்தரம், BSc Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
05. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1988, திருவோணம், Customer Adviser, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
06. Kokuvil, இந்து, கௌரவகுலம் (V), 1987, சித்திரை, Londan A.L, Dip. in IT, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
07. சுருவில், இந்து, கௌரவகுலம் (V), 1987, அச்சுவினி, MSc, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1987, புனர்பூசம், BSc Civil Engineering, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.
09. நீர்வேலி இந்து, கௌரவகுலம் (V), 1986, அத்தம், Dip. in Edu, கனடா, மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## நினைவலைகள்

3 ஆம் ஆண்டு



### அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை

தோற்றம் 08.06.1938 மறைவு 28.09.2020

திதி நிர்ணய வெண்பா

அன்பே அப்பா....

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் திகழ்ந்தீர்கள்
பண்புடைமை காத்துப் பக்குவமாய் நடந்தீர்கள்

இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்தீர்கள்
எல்லோர்க்கும் நல்லவராய் நாணயமாய்
வாழ்ந்தீர்கள் துன்புற்றோர் துயர் துடைக்கும்
துணைக் கரமாய் இருந்தீர்கள்

ஏனோ இறைவன் இடை நடுவில் பறித்து விட்டான்...
பண்புள்ளோரைப் பல காலம் வாழவிடக்
கூடாதென்றோ...? என் செய்வோம்.
எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு இருந்திடும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

6 ஆம் ஒழுங்கை,
வேப்பம் குளம்,
வவுனியா.

cs.52441) (N.1)

7 ஆம் ஆண்டு



### அமரர் செல்லத்துரை பாக்கியம் (கிளி)

தோற்றம் 20.09.1948 மறைவு 14.08.2016

திதி வெண்பா

அன்பே அம்மா....

நேற்றுவரை எங்களின் உறவிலே இருந்து விட்டு
தோற்றுப்போய் எமை விட்டுத் தொலைதூரம்
போனதேன்..

ஊட்டிய சோற்றிலே உணர்வினையும் ஊட்டினாய்
உன் பிள்ளைகள் எங்களில் பாசத்தைக் கொட்டினாய்
கண்களில் வைத்தெம்மைக் கண்மணிபோல் காத்துமே
நெஞ்சினில் எம்மையே உன் நினைவாக நீ சுமந்தாய்
கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்

எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 • 04 • 1944



இறப்பு 09 • 10 • 2023

### கதிரவேலு சின்னத்துரை (குஞ்சர்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சின்னத்துரை கடந்த (09.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பொன்னம்மா தம்பதியரின் மகனும், அல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கேமலதாவின் தந்தையும், ஞானசங்கரின் மாமனும், நவீனா, ஜீவனா, மயூரன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசதுரை, யோகநாதன், கந்தசாமி, குமாரசாமி, தவயோகம் ஆகியோரின் சகோதரனும், சிவராசா, பராசக்தி, ஜெயலக்ஷ்மி, திருநாவுக்கரசு, தயாபரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 150 7067
076 639 7725

(N.1

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும் போராட்டங்கள்

நீதித்துறையின் சுயாதீனம் மீதான அழுத்தங்களைக் கண்டித்து வடக்கு – கிழக்கு மாகாணங்களில் கதவடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. 7 தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் அவரின் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கத் தரப்பின் அழுத்தங்களைக் கண்டித்து வ்டக்கு– கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் தொடர்ச்சியாக வெவ்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது கதவடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

நீதித்துறையின் மீது குறிப்பாக தமிழ் நீதிபதிகள் மீது திணிக்கப்படும் அழுத்தங்களுக்கு, அச்சுறுத்தல்களுக்கு எதிர்வினையாற்றுவதும், இலங்கையின் நீதித்துறை பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதியை வழங்காது என்ற செய்தியை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லும் வாய்ப்பையும் தமிழ்த் தரப்புகள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதும் அவசியம். மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களின் மூலமே அதைச் செய்யமுடியும் என்பதை மறுக்கமுடியாது. ஆனால், இந்த வாய்ப்பைத் தமிழ் தரப்புகள் அரசியல் தலைமைகள் சரியாகப் பயன்படுத்துகின்றார்களா? என்ற கேள்வியும் இருக்கின்றது. மக்களைத் தங்கள் பக்கம் திரட்டுவதில் மக்களுக்கு தலைமை தாங்குவதில் அவர்கள் தோல்வியுறுகின்றனரா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது: தமிழ்த் தலைமைகளால் கடந்த காலங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட பல போராட்டங்கள் வீரியமற்றவையாகவே முடிந்துள்ளன. இறுதியாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டம்கூட எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை. போராட்டங்களில் பங்கெடுப்போரின் எண்ணிக்கை குறைவடைவது தமிழ்த் தலைமைகள் மீது –போராட்டங்கள் மீது – தமிழ் மக்கள் மனங்களின் எழுந்துள்ள நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடு என்று கொள்ளமுடியும். இது மிகவும் ஆபத்தானது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ்க் கட்சிகளிடையேயுள்ள ஒற்றுமையின்மையும், ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை –விரக்தி நிலைமையை– ஏற்படுத்தியிருக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான கொள்கைகள் இருந்தாலும் இன ரீதியான பிரச்சினைகளில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொருவிடயத்திலும் கட்சி அரசியலையும், வாக்கு அரசியலையையும் மையமாக வைத்தே தம் நகர்வுகளை முன்னெடுப்பது தமிழ் மக்களை அவர்களிடம் இருந்து தூரத்தள்ளி வைத்திருக்கின்றது.

போராட்டங்களை ஏற்பாடு செய்வோர் இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒப்புக்குச் சப்பாணியாக வீரியமற்ற போராட்டங்களை, எதிர்ப்புகளைக்காட்டி மக்களின் மத்தியிலும், சர்வதேசத்தின் மத்தியிலும் எதிர்மறைக் கருத்துகளை அரசியல் கட்சிகள் உருவாக்கிவிடக்கூடாது. அனைத்துத் தரப்புகளையும் உள்வாங்கி– மக்களை ஒன்றிணைத்து –போராட்டங்களை முன்னெடுக்க முயலவேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே தமிழர் குரல் சர்வதேசத்தின் கதவைத் தட்டும். அதை உணர்ந்து தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் மோதல்களைக் கைவிட்டு ஒன்றுபடவேண்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே..

### நாளொரு நல்வார்த்தை

காலம் விஷயங்களை மாற்றுகிறது என்று எப்போது கூறுகிறார்கள்; ஆனால், உண்மையில் நீங்கள்தான் மாற்றவேண்டும்

– வார்ஹோல்




## தேர்தலை ஒத்திவைக்கவே தேர்தல்முறைமை மாற்றம்

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக்.11**

**ஜனாதிபதித் தேர்தல் உட்பட தேசியத் தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கத்திலேயே நாடாளுமன்றத் தேர்தல் முறையை மாற்றுவதற்கானநடவடிக்கைகளை அரசாங்கம்முன்னெடுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

கலப்பு முறையின் கீழ் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரிய அமைச்சரவைத் தீர்மானத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த யோசனையின் பிரகாரம் தொகுதிவாரி முறையின்கீழ் 160 உறுப்பினர்களும் விகிதாசார முறைமையின் கீழ் 65 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவார்கள். இது தொடர்பான பணிகளை முன்னெடுப்பதற்காக அமைச்சரவை உபகுழு அமைக்கப்படவுள்ளது.

தற்போது விருப்பு வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்தத் தேர்தல் முறைமையில் மாற்றம் தேவை என கடந்த காலத்தில் அனைத்துத் தரப்பாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இதற்கான பல முயற்சிகளும் எடுக்கப்பட்டிருந்தன. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட கடுமையான அரசியல் நெருக்கடிகளால் இந்தப்பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கிலேயே தேர்தல்முறை மாற்றம் என்ற ஆயுதத்தை அரசாங்கம் கையில் எடுத்துள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் எந்தவொரு முயற்சிக்கும் கடுமையான எதிர் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (எ-இ)

## சீனாவுடன் புதிய ஒப்பந்தம்

கொழும்பு, ஒக். 11

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கும் சீன மக்கள் குடியரசின் தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணையகத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உற்பத்தித் திறன் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அரசாங்கம் கூறுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

**நாளை** 12.10.2023

வியாழக்கிழமை

புரட்டாதி 25

சுபநேரம் : 07.32 - 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்



## ஆடுகளத்துக்கு அப்பால்...!!



உலகக்கிண்ணத் தொடர் இடம்பெறும், இமாச்சலப் பிரதேசத்தின் தர்மசாலா மைதானம் விளையாடுவதற்குப் பாதுகாப்பற்ற மைதானம் என்று சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் (ஐ.சி.சி.) முறையிடப்பட்டிருக்கின்றது.

முகில்களை வெள்ளாடையாகக் கொண்ட மலைவெளி, பசுமையான மேய்ச்சல்தரை, இவற்றுக்குக் கீழே ஒரு கிரிக்கெட் மைதானம். இப்பிடியொரு இட அமைவைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? கற்பனைக் கதைகளில் மட்டுமே சாத்தியம் என்பது போன்ற இத்தத் தோற்றத்தை அவ்வாறே கண்முன் பிரதிபலிக்கின்றது தர்மாசாலா. அதனால்தான் இன்று உலகின் மிக அழகிய கிரிக்கெட் மைதானமாக தர்மசாலா அறியப்படுகின்றது.

உலகக்கிண்ணத் தொடரின் சில ஆட்டங்களை தர்மசாலாவில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. இதற்கேற்ப பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் தர்மசாலாவில்தான் நடந்தது. ஆனால் தர்மசாலா, கிரிக்கெட்டை நடத்தத் தகுதியற்ற இடம் என்ற மேற்கோளுடன் ஐ.சி.சி.யிடம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது

அதீத குளிர் பிரதேசமாகையால் மைதானத்தின் வெளிப்பகுதியில் (பவுர்பிளே சுற்றுவட்டத்துக்கு அப்பால்) உள்ள புற்களில் ஒருவித பாசித்தன்மை காணப்படுகின்றது. இது வீரர்கள் உபாதைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம் என்றும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டமொன்று முன்னர் தர்மசாலாவில் இருந்து பூஞ்சைத் தோற்றால் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டது. ஆக, இந்தப் பிரச்சினை இருக்கின்றது என்று தெரிந்தும் எதற்காக தர்மசாலாவில் ஆட்டங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டது? இந்தக் கேள்விக்கான பதிலை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் ஐ.சி.சி. எதிர்பார்த்தே ஆகவேண்டும்.

# பலவீனமான பந்துவீச்சால் வீழ்ந்தது இலங்கை அணி



**புதுடில்லி, ஒக். 11**

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், பலவீனமான பந்துவீச்சாலும் வினைத்திறனற்ற களத்தடுப்பாலும் பாகிஸ்தானிடம் படுதோல்வியடைந்தது இலங்கை அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான குசல் ஜெனித் பெரேரா ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். பதும் நிசங்க, குசல் மென்டிஸ் இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். நிசங்க நிதானமாக ஆடியபோதிலும் மறுமுனையில் அடித்தாடினார் குசல் மென்டிஸ். 51 ஓட்டங்களுடன் பதும் நிசங்க பவிலியன் திரும்பினார். களமிறங்கினார் சமரவிக்கிரம. குசல் மென்டிஸ் விக்கிரம இணை நின்று நிதானித்து விளையாடினது. பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ரவூப்பை கொஞ்சம்கூட 'கவனத்தில்கொள்ளாமல்' அடித்தாடிச் சதம் கடந்தார் குசல் மென்டிஸ். 77 பந்துகளில் 122 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் குசல் மென்டிஸ். 108 ஓட்டங்களுடன் சமரவிக்கிரமவும் பவிலியன் திரும்பினார். இந்த இணை வெளிப்படுத்திய அதிரடி பின்வரிசையில் இல்லை. தனஞ்ச டி சில்வா, சானக இருவரும் நிதானத்தையே வெளிப்படுத்தினர். முடிவில் 9 இலக்குகளை இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை. பந்துவீச்சில் ஹசன் அலி 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர் இமாம் உல் ஹக் 12 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் பாபர் அசாம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். ஆனால் சபிக், ரிஸ்வான் இருவரும் இணைந்து அணியை கொஞ்சம்கொஞ்சமாக மீட்டுவந்தனர். ஒரு கட்டத்தில் நிலைமை கைமீறுவது உணரப்பட்டது. இலங்கை அணியின் வயிற்றில் புளியைக் கரைக்கும் இணைப்பாட்டமாக இது மாற்றியது. 180 ஓட்டங்களுக்கும் மேலாக இணைப்பாட்டம் பகிரப்பட்ட பின்னர் அதாவது அணி 213 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 113 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சபிக். எனினும் ரிஸ்வான் நிலைத்து நின்றார். இப்திகார் அஹமட் வழங்கிய இணைப்பாட்டத்துடன் 10 பந்துகள் மீதமிருக்க இலங்கையை வென்றது பாகிஸ்தான். ரிஸ்வான் 131 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

# பங்களாதேஷை மிக இலகுவாக வீழ்த்தியது இங்கிலாந்து அணி!




புதுடில்லி, ஒக். 11

உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் பங்களாதேஸ 137 ஓட்டங்களால் எந்தப் பதற்றமும் இல்லாமல் வீழ்த்தியது இங்கிலாந்து அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9 இலக்குகள் இழப்புக்கு 364 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மலன் 107 பந்துகளில் 140 ஓட்டங்களைக் குவித்தார். மூன்றாம் நிலை வீரரான ரூட் 82 ஓட்டங்களையும், ஆரம்ப வீரர் பேர்ஸ்டவ் 52 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். ரூட் இந்த உலகக்கிண்ணத் தொடரில் மிக நேர்த்தியாக விளையாடி வருகின்றார். இம்முறை இங்கிலாந்து அணியை அரையிறுதியை நோக்கி அழைத்துச் செல்லும் கருவியாக அவர் இருப்பார் என்பது அவருடைய ஆட்டத்தில் மிகையாகவே எதிரொலிக்கின்றது.

பந்துவீச்சில் மெகதி ஹசன் 4 இலக்குகளையும், இஸ்லாம் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 227 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. ஆனால் ஆரம்ப வீரர் லித்தன் டாஸ் 76 ஓட்டங்களைக் குவித்து தான் திறனுக்குத் திரும்பியதை உறுதிப்படுத்தினார். அனுபவ வீரர் ரஹிம் அரைச்சதத்தைப் பெற்றார். இவர்கள் இருவரையும் தவிர வேறு எவரும் துடுப்பாட்டத்தில் பிரகாசித்ததாக இல்லை. பந்துவீச்சில் ரொப்லி 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாள் 5 இன் வெற்றியாளர்கள்

தினம் ஒரு பரிசு

சு.கேசநந்தினி – உடுவில்
மா.ஜனோசன் – வண்ணார்பண்ணை
எம்.கோசயன் – சாவகச்சேரி
ஜெ.காந்தறூபன் – குருநகர்
ப.கார்த்திகேசு – வவுனியா
கே.யாழரசன் – பளை
வைஷ்ணவி – பருத்தித்துறை
சி.மதுசன் – முல்லைத்தீவு
இ.அபிசன் – சாவகச்சேரி
லோ.ஹாரிணி – கொக்குவில்
எல்.நித்தேஷ் – பண்டிவிரிச்சான்
கூ.பீற்றர் கூஞ்சு – மாந்தை
எல்.கேதாஜினி – ஏழாலை
வி.துர்க்காயினி – கீரிமலை
சி.மேரிநிலானி – இளவாலை



# தனிமையில் கில்!

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கில், அணியின் மருத்துவக் குழுவால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.
டெங்குக் காய்ச்சலால் கில் அவதிப்பட்டு வருகின்றார். இதனால் அவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் விளையாடவில்லை. ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இன்று இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்திலும் கில் விளையாடமாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள விடயம் 'பிந்திய அறிவிப்பாக' இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. வழமையாக இவ்வாறு ஒரு வீரர் பாதிக்கப்பட்டால் அவர் தனிமைப்படுத்தப்படுவார் என்றபோதிலும், இந்திய அணியுடனான பயணப்பாதையில் செல்வதற்குக்கூட கில் இம்முறை அனுமதிக்கப்படவில்லை. (ம)




# உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 6

**இந்தியா- ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (11.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**


பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

இந்தியா – ஆப்கானிஸ்தான்

**இடம் : டெல்லி**
**நேரம் : பி.ப. 2.00**



# இன்றைய ஆட்டம்

## ஓர் அலசல்

உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன. டெல்லி கோட்லா மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.
இந்திய அணி அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகப் பெற்ற வெற்றிக்குப் பின்னரும், ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷுடனான தோல்விக்குப் பின்னரும் இன்றைய ஆட்டத்தை எதிர்கொள்கின்றன. இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை அசுர பலத்தில் இருக்கின்றது. அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 2 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து பரிதவித்த நிலையில் இருந்து மீண்டுவந்து அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதில் இருந்தே இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை பட்டவர்த்தனமாகின்றது.
அதேநேரம், ரோகித், இஷான், கோலி, ஸ்ரேயஸ், ராகுல், பாண்டியா, ஜடேஜா என்ற இந்தப் படையை அசைக்கவல்ல பந்துவீச்சு வரிசை ஆப்கானிஸ்தானிடம் இல்லாமலில்லை என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். ரஷீத்கான், நபி, முஜிப் ரஹ்மான் என்று 'உலகத்தரம் வாய்ந்த' சுழற்கூட்டணி ஆப்கானிஸ்தானிடம் இருக்கவே செய்கின்றது. ஆனால், கடந்த ஆட்டத்தில் ரஷீத்கானின் கைகளில் உணரப்பட்ட வலி, 'உபாதை' என்ற நிலைக்குச் சென்றால் ஆப்கான் விளையாடுவதும் ஒன்றுதான் விளையாட வராமல் விடுதியில் இருப்பதும் ஒன்றுதான்.
ஆப்கானிஸ்தானின் துடுப்பாட்டவரிசை அவ்வளவு பெரிய ஆபத்து நிலையில் இல்லை. ஆனால் அந்த அணியின் ஆரம்ப வீரர்களான குர்பராஸ் மற்றும் இப்ராஹிம் சடான் இருவரும் மிகத்தரமான வீரர்கள். அதிரடி, நிதானம் என இரண்டு பாணியிலும் கலக்கக்கூடியவர்கள் அவர்கள்.
ஆப்கானிஸ்தான் அண்மைக்காலமாக குவித்த ஓட்டங்களில் ஏறக்குறைய 40 வீதமான ஓட்டங்கள் இவர்கள் பெற்ற ஓட்டங்களே. இந்தியாவின் பந்துவீச்சும் அண்மைய ஆட்டங்களில் பலமாகவே இருக்கின்றது. ஆசியக் கிண்ணத் தொடரில் இருந்து மிகச்சிறந்த முறையில் பந்துவீசிக்கொண்டிருக்கின்றது இந்திய அணி. இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்த்தாடும் வல்லமையுள்ளதாக ஆப்கானிஸ்தான் தென்படவில்லை என்பதே உண்மை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

# புதன் பொய்கை

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்." - வள்ளுவர்





## இன்றைய மாணவர்களுக்கு

# தேவைப்படும் கல்வியும் திணிக்கப்படும் திட்டமும்

பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் இன்றைய மாணவர்கள், நாளைய தலைவர்களாகவும், நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய நற்பிரஜைகளாகவும் உருவாக்கப்படவேண்டியவர்கள். ஆனால் அத்தகைய நிலையில் இன்றையகால கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகவிருக்கின்றது. அதிலும், தமிழர் பிரதேசத்தில் அண்மைக்காலங்களாக பாடசாலைகள் வெறும் கல்விக்கூடங்களாக மட்டுமே இயங்குகின்றன. மாணவர்களின் ஆற்றல்களையும், திறன்களையும் இன்றைய பாடசாலைகளினாலும் அவற்றின் கல்விக் கொள்கைகளாலும் வெளிக்கொண்டுவருவது என்பது வெறும் கானல் நீராகவே காணப்படுகின்றது. எனவே வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு களங்களைத் திறந்துவிடவேண்டும். இல்லையேல் 'ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது' என்பதுபோல மாணவர்களால் சவால்களுக்கு முகம் கொடுத்து சமூகத்தில் வாழமுடியாது திண்டாடுவார்கள் என்பதே உண்மையும் யதார்த்தமும்.

**“ வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு களங்களைத் திறந்துவிட வேண்டும். இல்லையேல் ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல மாணவர்களால் சவால்களுக்கு முகம் கொடுத்து சமூகத்தில் வாழ முடியாது திண்டாடுவார்கள். ”**

### காலத்தேவையான கல்விக்கொள்கை

மாணவர்களுக்கு, அவர்களின் ஆற்றல்களைத் தூண்டிவிடுவதே இன்று கட்டாயமாகச் செயற்படுத்தவேண்டிய விடயமாகவும், கல்விக் கொள்கையாகவும் இருக்கின்றது. அவ்வாறு தூண்டப்பட்டால் அவர்களது நேரம் அதனை வெளிப்படுத்துவதற்கான முயற்சியிலும் - பயிற்சியிலும் செலவாகும். உலகில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விடயத்தில் திறமைசாலிகளாக இருப்பர். அந்தத் திறமைசாலிகளை இனங்கண்டு கொள்பவர்கள் பாடசாலை ஆசிரியர்கள் என்பதும் உண்மையே. ஆனால் இன்றைய நிலையில் பாடசாலைகள் கல்வியில் மட்டும் அதிக கவனத்தை செலுத்துவதுடன் சுற்றறிக்கைகளுக்கு மட்டுமே வேலை செய்கின்றன. எழுதப்பட்ட அறிக்கைகளுக்கும் செயற்றிட்டங்களுக்கும் விசுவாசம் காட்டி திணைக்கள அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்கின்றனரே தவிர, மாணவர்களின் எதிர்காலம் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு அவர்கள் சிரமப்படுகின்றனர் - தயங்குகின்றனர். மாணவர்களது சுயகௌரவத்தை ஏற்படுத்திக் கொடுப்பது கல்வியும் ஏனைய இணைபாடவிதானச் செயற்பாடுகளுமேயாகும். ஆனால் பாடசாலைகளில் எல்லா மாணவர்களும் பங்குபற்றும் போட்டி விளையாட்டுப்போட்டி மட்டுமே. ஏனைய போட்டிகள் நடத்தப்படுவதில்லை. கல்வித்திணைக்களங்கள் பாடசாலைமட்டப் போட்டியை ஊக்குவிப்பதுடன் கட்டாயப்படுத்தவும்வேண்டும். ஏனெனில் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'என்னும் பழமொழிக்கு ஏற்ப, பாடசாலைக் காலத்தில் மாணவர்களால் வெளிப்படுத்தும் ஆற்றலே பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து அவர்களது சுயதிறனியலை அடைய வைக்கின்றது.



### தேவையும் திட்டமும்

பாடசாலை மட்டப் போட்டிகளை நடத்துவதன் மூலம் எல்லா மாணவர்களையும் பங்குபற்றுதலுக்குள் உட்படுத்த முடியும்.

இதன்மூலம் தமது அதி உச்ச ஆற்றலையும் திறனையும் மாணவர்கள் வெளிப்படுத்துவர்.

விட்ட தவறுகளை திருத்திக் கொள்வார். போட்டி விதிமுறைகள், பயம், வெட்கம், கூச்சம் என்பவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்வர். மாறாகப் பாடசாலைச் சமூகம் ஒருசில மாணவர்களையே எல்லா போட்டிகளுக்கும் அனுப்பி வெற்றிபெற்றால் சரி என நினைக்கின்றதேயொழிய மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய போட்டிகளை நடத்துவதில்லை. இதனால் அனேகமான மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதுடன், தமது ஆற்றலை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்றும் ஏங்குகின்றனர். தயார்ப்படுத்தலுக்கான அவகாசங்கள் போதாது என்ற காரணம் இந்த விடயத்தில் பொதுமைப்பாடாகச் சொல்லப்பட்டாலும் அவை ஏற்கக்கூடிய பதில்களே கிடையாது. மாணவர்களுக்கு பாடசாலை மட்டப் போட்டிகள் கட்டாயமானவை. இதன் மூலமே அவர்களிடம் இருக்கும் சுயஆற்றல் சுடர்விட்டுப் பிரகாசிக்கும். இதற்கு முத்தமிழ் விழா, ஆங்கிலதினவிழா, சமூக விஞ்ஞானப் போட்டிகள், சித்திரப் போட்டிகள், புத்தாக்கப் போட்டிகள் என்பவை பல உதாரணங்கள்.

மாணவர்கள் தமது இயலுமை எது? இயலாமை எது? என்பதை உணரக்கூடிய, புரிந்து கொள்ளக்கூடிய, முயற்சிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை பாடசாலைகள் வழங்காதுவிடின், அந்தப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையும் என்பதில் ஐயமில்லை.

### இன்று ஏன் அவசியம்?

மாணவர்கள் அனைவரையும் புத்தகக்கற்றலுக்கு மேலதிகமான கற்றல் நடவடிக்கைகளிலும், விளையாட்டுகளிலும், இதர இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்த வேண்டியது அவசியமாயினும், இன்றைய நாள்களில் இந்த விடயங்கள் மிகமிக தவிர்க்க முடியாதவையாக மாறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய காலங்களில் உயிர்கொல்லிப் போதைப்பொருள்கள் பாடசாலை மாணவர்களிடத்தில் வெகுவாக விரவியிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் போதையும் அதுசார் சீரழிவுகளும்தான் எஞ்சி நிற்கின்றன. மாணவர்களின் கைகளுக்கு போதைப் பொருள் கிடைக்கும் வழிகள், கையாடல்கள் இலகுவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் இருந்து மாணவர்களை பிடித்திழுத்து நேர்வழியில் பயணப்பட வைக்க வேண்டுமாயின், அவர்களின் கவனத்தை இவ்வாறான புததகக் கற்றலுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் ஊக்கப்படுத்த வேண்டும். இதில் எவ்வளவுக்கெவ்வளவு பாடசாலைகள் தீவிரம் காட்டுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு மாணவர்களின் எதிர்காலம் தீர்க்கமானதாக அமையும்.

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புகள் விமர்சனங்கள்,கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.
அனுப்ப வேண்டிய முகவரி: **புதன்பொய்கை உதயன், 361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: **puthanpoigai@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)



பேராசிரியர்
சிவேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்

### வரியிடல்முறைமை

பண்டைய அரசர்களுக்கும், வணிகர்களுக்குமிடையே நெருக்கமானதும், காத்திரமானதுமான உறவு இருந்தது. ஏனெனில் ஒரு நாட்டைச் செழுமைப்படுத்துவதற்கு வணிகர்களிடமிருந்து அறவிடப்படும் வரி வருமானம் பெருந் தேவையாய் இருந்தது. திருவள்ளுவர் 'பொருள்செயல்வகை' என்கிற அதிகாரத்தில்:

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறு பொருளும் வேந்தன் பொருள் (திரு: 756)

இந்தக் குறலின் வாயிலாக பண்டைய காலத்தில் அரசின் வருமானம் பின்வரும் மூன்று மூலங்களின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை ஊகிக்கலாம். உடைமையாளர்கள் யாரும் மின்றித் தானாக வந்த பொருள்கள் (இயற்கையாக தோன்றிய அல்லது கிடைத்த பொருள்கள்), சுங்கம் அறவிடுவதனால் வந்த பொருள்கள், சிற்றரசர்களிடமிருந்து இறையாகக் கொள்ளும் பொருள்கள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் வருமானங்கள். இவற்றில் அதிகளவிலானதும், நிலையானதுமான வருமானத்தை பெற்றுத் தருவது 'வாணிபச்சுங்கம்' ஆகும். இவ்வாணிபச் சுங்கத்தை 'உல்கு' மற்றும் 'வரி' என வெவ்வேறு வார்த்தைகளால் அழைத்தனர்.

நாட்டின் செழுமைக்கு ஆதார சுருதியாக அமைந்த உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தை மேற்கொள்ளும் வணிகர்கள் ஓம்பப்படவேண்டியவர்கள் என சங்கப்புலவர்கள் அழுத்தி அரசுக்கு அறிவுரை கூறுவது போன்ற பாடல்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அந்த வகையில் புறநானூற்றில் இந்தப் பாடலை உதாரணமாகக் கொள்ளுதல் பொருத்தமானது ஆகும்.

பகடு புறந் தருநர் பாரம் ஓம்பி,
குடிபுறந் தருநுவை ஆயின், நின்
அடிபுறந் தருவர், அடங்காதோரே
(புறம்: 35: 3234)

இறையாளனதும், இறைபுலத்தினதும் பொருளாதார வளத்துக்கு அடிப்படையாக விளங்குகின்ற வணிகர்கள் உயர்குடி பிறந்தவர்கள் முடிக்குரிய மன்னன் பாதுகாக்கப்பட்டு அவ்வேளை அவர்களது, வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதுமான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். இத்தகைய செயற்பாடுகள் உள்நாட்டில் மேம்பாட்டுக்கு மட்டுமல்லாமல் அரசுக்கு வெளியே, அரசனது ஆளுமைக்கு அப்பாலாய் வாழும் பகையாளிகளைக் கூட பணியவைக்கும், ஒரு நுட்பமாகவும் தந்திரோபாயமாகவும் அமைகிறது. இன்று பாதுகாப்பு என்ற அடிப்படையில் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் காவல் அன்று ஊள் அல்லது 'காவல்' என்று அழைக்கப்பட்டது. காவலுக்கான வேதனம், பிற செலவினங்களைத் தாங்கிக் கொள்வதற்கு வணிகர் வழி வரவுகள் துணைபுரிகின்றன என்பது திணை துறைமுக நகராகவும் மதுரையைத்தலை நகராகவும் (அரசியல் தலைமைப்பீடமாகவும்) கொண்டு ஆட்சிபுரிந்த கரிகாற் பெருவளவனுக்கு காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து அறவிடப்படுகின்ற சுங்கம் செழிப்பாகக் கிடைத்து வந்தது.

### அடிப்படை உட்கட்டமைப்பு

செங்கடல் செலவு என அழைக்கப்படும் நூல் ஆரம்பகால உரோம, கிரேக்க, இந்தியா இடையிலான கடல்வழி வணிக வரலாற்றைக் கூறுகின்றது. இந்த நூலில் பண்டைய தமிழனின் வாணிபமும் அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட துறைமுகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நூலில் சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார் என்ற பெயர்களில் வழங்கிய சோழர்களின் துறைமுகப் பட்டணம் 'காபேரிஸ்' என்றும் மேலும் கொற்கைத் துறைமுகத்தை 'கொல்கி' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று யாழ்பாணத் தொன்மை வரலாறு என்கிற நூலில் சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். மேலும் முசிறி, கொற்கை, பூம்புகார், சாலியூர், தொண்டி, எயிற்பட்டி, மருங்கூர்ப்பட்டினம் முதலிய பண்டைக் கால துறைமுகங்களின் ஊடாகத் தமிழன் வியாபாரத்தில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாது உலக வாணிப வரலாற்றில் தனக்கென்று ஓர் இடத்தை உருவாக்கிக் கொண்டான் எனக் குறிப்பிடுகின்றார். இக் கருத்துகளுக்கு மகுடமாய். ராஜன் என்னும் அறிஞரால் எழுதப்பட்ட 'தொல்லியல் நோக்கில் சங்க காலம்' 1889ஆம் ஆண்டு என்ற நூலில் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் நிறுவப்பட்ட அரும்பொருள் காட்சியகத்தில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எகிப்து நாட்டில் நைல் நதி ஆற்றின் முகத்து வாரத்தில் அமைந்துள்ள அலெக்சாந்திரா என்ற துறைமுகத்தில் வாழ்ந்த வணிகன் ஒருவனுக்கும் முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகன் ஒருவனுக்கும் இடையில் கிரேக்கமொழியில் எழுதப்பட்ட வியாபார உடன்படிக்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார்.

இந்த உடன்படிக்கையில் பொருள்கள் இந்தியாவில் கிரேக்க தேசத்தைச் சென்று அடையும் வரையான செலவுகள், பிரயாண காலம், ஏற்றி இறக்கல் செலவினங்கள் (மாட்டு வண்டி கூலிகள்) போன்றவை எல்லாம் இற்றைக்கு 2000ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த வணிக உடன்படிக்கையில் எழுதப்பட்டிருப்பதனைக் காணும்போது தமிழருடைய பண்பாட்டு ரீதியானதும் வரையறைகளுக்கு உட்பட்டதுமான அணுகுமுறையானது வியக்கத்தக்கதும் போற்றத்தக்கதுமாகும். சட்ட பூர்வமாக அமுல்படுத்தக்கூடிய ஒப்பந்தம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை இயல்புகளான கொடை முனைவு, ஏற்பு, பிரதியன், சட்டரீதியான உறவை உருவாக்குவதற்கான எண்ணம், கட்சிக்காரர்களின் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகைமை, பொருளின் சட்டபூர்வத்தன்மை ஆகியவை இந்த வணிக உடன்படிக்கையில் உள்ளமை கவனிக்கத்தக்கது.

இங்கு குறிப்பிடதக்கது. வட இந்தியாவில் கங்கைச் சமவெளியில் தோன்றிய மௌரிய வம்சங்களின் சாம்ராஜ்ய காலங்களில் கூட சத்திரிய - வைசியர்களுக்கும் இடையில் நல் உறவு இருந்ததாக செய்திகள் உண்டு. கோசாம்பி என்கின்ற அறிஞர் இதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: 'வணிக - சந்திரிய இணைவுக்கும் அறக் கருத்துக்களுக்கும் சம்பந்தம் உண்டு. பாதுகாப்பான வியாபாரத்துக்கு பரந்துபட்ட முடியாட்சி வளர்ச்சி அவசியமானது' என்கிறார். இதன் அடிப்படையில் வணிகத் திணை தொடர்ச்சியாகவும், இலாபகரமாகவும் மேற்கொள்ளுவதற்கு ஒரு நிலையான ஆட்சிமுறைமை தேவைப்படுகின்றது.

அதேவேளை நாட்டினை செல்வச் செழிப்புடன் ஆளுவதற்கு வாணிபத்திலிருந்து கிடைக்கும் சுங்க வருமானம் தேவைப்படுகின்றது. இதனால் 'சத்திரிய - வைசிய' உறவின் சார்பு நிலைத்தன்மை தவிர்க்க முடியாது ஆயிற்று. பண்டைய வேந்தர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகங்களுக்கு பாகுபாடின்றி சுங்கம் அறவிட்டார்கள். கடல் வாணிகத்தில் ஈடுபட்டவர்களிடம் இருந்து அறவிட்ட வரிவருமானமே உபரியாய் கிடைக்கப்பெற்றது. காவிரிப் பூம்பட்டினத்

(தொடரும்..)

# சிறைச் சாளரத்தின் ஊடே ஓர் உன்னத கனவு



## அமைதிக்கான நோபல் வென்ற நர்கிஸின் வலிமிகு வாழ்க்கை

ஈரான் நாட்டைச் சேர்ந்த நர்கிஸ் முகம்மதிக்கு 2023ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் நாட்டுப் பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருவதற்காகவும், மரண தண்டனைகளை எதிர்த்து மனித உரிமைகள், சுதந்திரத்துக்காகப் போராடி வருவதற்காகவும் அவர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் மனிதஉரிமைகள் பாதுகாப்போர் அமைப்பின் துணைத் தலைவராக இருக்கிறார். இருப்பினும், அமைதிக்கான நோபல் விருதை நர்கிஸ் மற்ற விருதாளர்கள் போல் வந்து பெருமிதத்துடன் வாங்க இயலாது. காரணம், நர்கிஸ் இப்போது ஒரு சிறைப் பறவை. அவரது போராட்டங்கள் நீண்ட நெடிய பின்னணி கொண்டவை.

நர்கிஸ் முகம்மதி சிறு பிள்ளையாக இருந்தபோது அவரது தாய் அவரிடம் இவ்வாறாகச் சொல்லியுள்ளார். 'மகளே, நீ ஒருபோதும் அரசியல் பழகாதே. ஈரானைப் போன்ற அரசியலமைப்புக் கொண்ட நாட்டில் அமைப்புகளுக்கு எதிராகப் போராடினால் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்'. இவ்வாறு நர்கிஸின் தாய் சொன்னது தீர்க்க தரிசன வார்த்தைகள் போன்று பலித்தேவிட்டது. ஈரான் அரசியல் அமைப்பை எதிர்த்து அரசுக்கு எதிராக நர்கிஸ் கொடுத்த குரல் அவரை சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளியுள்ளது. நர்கிஸ் ஒரு பொறியியல் நிபுணர். ஆனால் அவர் வேலை பறிபோனது. குழந்தைகள், குடும்பம் பறிபோனது. அவரது கணவர் ஏற்கெனவே ஈரான் அரசால் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர். அவர் தற்போது பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் புகுந்து இரண்டு குழந்தைகளுடன் வசிக்கிறார். நர்கிஸ் தனது 16 வயது இரட்டைக் குழந்தைகளின் குரலைக் கேட்டே ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அவர் அவருடைய மகனையும், மகளையும் ஆரத்தழுவி 8 ஆண்டுகள் ஓடிவிட்டன. நர்கிஸ் இன்று நேற்றல்ல 30 ஆண்டுகளாக ஈரான் அரசுக்கு எதிராக எழுதியிருக்கிறார். களத்தில் போராடி இருக்கிறார்.

### சிறைக் கனவு

ஈரான் நாட்டின் வடக்கு பகுதியில் தலைநகர் தெஹ்ரானில் உள்ள சிறைச்சாலையில் தான் நர்கிஸ் தற்போது இருக்கிறார். கடந்த ஏப்ரல் மாதம் அவர் அங்கிருந்தவாறே தொலைபேசி மூலம் அயல்நாட்டு ஊடகத்துக்குப் பேட்டி அளித்தார்.

அதில் அவர், 'என் அறையின் சாளரத்தின் முன்னால் நான் ஒவ்வொரு நாளும் அமர்கிறேன். அதன் வழியாக வெளியே தெரியும் மலைகளைப் பார்க்கிறேன். அதில் இருக்கும் பசுமை புல்வெளியைப் பார்க்கிறேன். அதைப் பார்த்தவாறே சுதந்திர ஈரானுக்கான கனவைக் காண்கிறேன்.

என்னை அவர்கள் எவ்வளவு அதிகமாகத் தண்டிக்கிறார்களோ, என்னிடமிருந்து எத்தனை எத்தனை உரிமைகளைப் பறிக்கிறார்களோ அந்த அளவுக்கு எனது போராட்டம் வலிமை பெறுகிறது. ஜனநாயகமும், சுதந்திரமும் பெறவேண்டும் என்ற போராட்ட குணம் வலுப்பெறுகிறது' என்று கூறினார். அவருடைய அந்தப் பேட்டி சிறையைத் தாண்டி பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இது காலப்போக்கில் மேலும் வலுப்பெற்று இன்று அமைதிக்கான நோபல் நர்கிஸுக்குக் கிட்டுவதற்குக் காரணமாக இருந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் தனபாலசிங்கம்

(நெடுங்கேணி லிங்கம் கபே உரிமையாளர்)



**தோற்றம்** 17.01.1951 **மறைவு** 09.10.2023

புங்குடுதீவு மடத்துவெளி 7 ஆம் வட்டாரம் வரதீவைப் பிறப்பிடமாகவும், 8 ஆம் வட்டாரத்தை புகுந்த இடமாகவும் பின்னர் நெடுங்கேணி லிங்கம் கபே உரிமையாளரும், சுவிஸ், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தனபாலசிங்கம் கடந்த (09.10.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - கண்ணம்மா தம்பதியரின் அருமை மருமகனும், கிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும், கலாவேணி (வனஜா - சுவிஸ்), சத்தியவேணி (தயா - லண்டன்), சுபாசினி (சுபா - சுவிஸ்), ஜெயச்சித்திரா (சித்திரா - சுவிஸ்), ஜெயப்பிரதா (பிரதா - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மராசா (ராஜா - சுவிஸ்), வீரகுமார் (குமார் - லண்டன்), மோகனநாதன் (மோகன் - சுவிஸ்), சிவதாஸ் (ராசன் - சுவிஸ்), ரூபகரன் (ரூபன் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற இராசரெத்தினம் மற்றும் பற்குணராசா (கனடா), நவரத்தினராசா மற்றும் சேனாதிராசா, தவமலர், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் சிவராசா ஆகியோரின் சகோதரனும், இராசாத்தி, கலாநிதி (கனடா), மகேஸ்வரி, புவனேஸ்வரி, தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், மிதுஜன், ஜெனுஜன் (சுவிஸ்), திலக்ஷா, மிதுர்ஷா, நிவிஷா (லண்டன்), ரதுசன், மாருசன் (சுவிஸ்), கம்ஷா, அபிநயா, வினோஸ் (சுவிஸ்), சஜிபன், கமிலன், அச்சுதன் (சுவிஸ்), அஸ்மிதா (ஜேர்மன்), அரவிந் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், மீராவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 02, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
**077 691 3607**


தகவல்:
மனைவி,
மக்கள், மருக்கள்,
பேரப்பிள்ளைகள்

(cs.52453) (N.1)

---

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 08 - 06 - 1936



**மறைவு** 08 - 10 - 2023

## வேலுப்பிள்ளை செல்வநாயகம்

(பிரதம கணக்காளர், இலங்கை புகையிரதத் திணைக்களம்)

யாழ். மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை மற்றும் மட்டுவில் வடக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வநாயகம் கடந்த (08-10-2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் மற்றும் உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு அன்பு தந்தையும், ஆர்.உதேனி மற்றும் மயில்வாகனம் பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌதமி, ஹர்ஷான் மற்றும் பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசையா மற்றும் கந்தசாமி ஜெயமணி (இலங்கை), காலஞ்சென்ற கந்தசாமி யோகநாதன், காலஞ்சென்ற கந்தசாமி கதிர்காமநாதன் மற்றும் கந்தசாமி கமலநாதன் (லண்டன்) மற்றும் ஆலாலசுந்தரம் தேவகி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். யோகநாதன் இந்திராதேவி (அவுஸ்திரேலியா), கதிர்காமநாதன் செலின் (கனடா) மற்றும் கமலநாதன் மகேந்திரராணி (லண்டன்) ஆகியோரின் உறவுமுறை சகோதரரும், கணபதிப்பிள்ளை ஆலாலசுந்தரம் (இலங்கை) அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12-10-2023) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் வடக்கு - ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அம்மன் கோவிலடி,
மட்டுவில்வடக்கு,
சாவகச்சேரி.
தொடர்புகளுக்கு:
**077 737 3762 / 077 779 7754**

தகவல் :
குடும்பத்தினர்


(CS 40744) (AK.1)

---

ஓம் விராட்விஸ்வப்பிரம்மனே நமக!

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 06 - 10 - 1936



**மறைவு** 08 - 10 - 2023

## நாகலிங்கம் வரதராஜா

(ஓய்வு நிலை பொறியியலாளர் இலங்கை மின்சார சபை)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், இல 20, சங்கத்தானை டச்சு வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் வரதராஜா கடந்த (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பாலகிருஷ்ணன், நாகரத்தினம், ராங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கருணாதேவியின் அன்புக் கணவரும், ரகுராம் (ஜேர்மனி) பிரபுராம், ராஜாராம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தினி, மஞ்சுளா, குணசிறி (லதா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விபூசிதன், பிரணவன், சாங்கவி, மிதுரா, அஸ்வின், சாய்வின் ஆகியோரின் அன்பு பேரனும், நிர்மலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கிருஷ்ணகுமார், திரு. ஜெயராசசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (11.10.2023) புதன்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
**077 085 6058, 077 077 9745, 076 701 7544**

இல. 20, சங்கத்தானை,
டச்சு வீதி, சாவகச்சேரி. (CS 52454) (AK.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணிலைப் பாராட்டும் கோத்தாபய ராஜபக்ச

கொழும்பு, ஒக்.11
இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை அடியோடு நிராகரித்து சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டுகின்றேன் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி பதவியிலிருந்து நான் விலகியபோது புதிய ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன். அதற்கமைய நாடாளுமன்றம் அவரைப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது. ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார். இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை. நாடாளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்கமுடியாது. நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். உண்மையில் அவர் சிறந்த தலைவர் - என்றார். (எ-இ)

# தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசுக்கில்லை!

## நீதி அமைச்சர் கூறுகின்றார்

**கொழும்பு, ஒக்.11**
**தேர்தல்முறை மாற்றத்தின் ஊடாக தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பாக ஆலோசனைகளை நடத்தி வருகிறது. அதனால்தான் நான் முன்வைத்த தீர்மானத்தை ஆராய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முறை சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல - என்றார்.

தேர்தல் முறை மாற்றம் என்ற போர்வையில் 2017ஆம் ஆண்டு முதல் மாகாணசபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றங்களுக்கான ஆயுட்காலம் முடிந்து இரண்டு ஆண்டுகளை எட்ட உள்ள நிலையில் அவற்றுக்கான தேர்தலும்ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைய சந்திப்பின் போது தேர்தல் சீர்திருத்தங்கள் அல்லது எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடவில்லை என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஷாப்டரின் உடலை கையளிக்க மறுப்பு

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் பூதவுடலை உறவினர்களிடம் கையளிக்கமுடியாது என மரணம் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் மருத்துவர்கள் குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மருத்துவப் பரிசோதனைகள் முடிவடைந்திருந்தால், சடலத்தைத் தம்மிடம் கையளிக்கவேண்டும் என்று உறவினர்கள் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். எனினும், சடலத்தை வழங்கமுடியாது என பரிசோதனைகளை நடத்தும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்திர ஜயசூரிய அறிவித்துள்ளார்.

தினேஷ் ஷாப்டரின் உடல் மீதான பரிசோதனைகள் தொடர்ந்தும் நடத்தப்படவுள்ளன. அதனால் சடலத்தை தற்போது உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது என்று மருத்துவர்கள் குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

# அரசியல் வேண்டாம் அலிசப்ரி தீர்மானம்

கொழும்பு, ஒக்.11
அடுத்த தேர்தலில் போட்டியிடப்போவதில்லை. எனது அரசியல் பயணம் ஒரு தடவைக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-



அரசியல் எனக்கு அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. அடுத்த தேர்தலில் போட்டியிடமாட்டேன். அழைப்புகள் வந்தாலும் அதை ஏற்கும் நிலையில் இல்லை. எனது தொழில்சார் நடவடிக்கையை முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளேன். அரசியலுக்கு வந்து ஒரு சதம்கூட சம்பாதித்ததுகிடையாது, அதற்கான தேவைப்பாடும் எனக்கு இல்லை. எனது குடும்பத்தாரும் நான் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை. நெருக்கடியான நேரத்தில் நாட்டைவிட்டுச் செல்ல முடியாது. அதனால்தான் நெருக்கடியான காலகட்டத்தில் நிதி அமைச்சுப் பதவியைக்கூட ஏற்றேன். மே 9 ஆம் திகதிக்குப் பிறகு அரசியல் முழுமையாக வெறுத்துவிட்டது - என்றார். (எ-44)

# நவம்பர் இறுதியில் இலங்கை வரவுள்ள சீன ஆய்வுக்கப்பல்

கொழும்பு, ஒக்.11
சீன உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கப்பலை எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கை வருமாறு அறிவித்துள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாதமே இந்தக் கப்பல் இலங்கை வரவிருந்தது. இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் முக்கியமான சில மாநாடுகள் நடைபெறவுள்ளன. ஜனாதிபதி சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். அதேபோல பிரான்ஸ் குழுவொன்று இலங்கை வரவுள்ளது. எனவேதான் நவம்பரில் வருமாறு தெரியப்படுத்தியுள்ளோம்.

அழுத்தங்கள் இல்லை எனக் கூற முடியாது. எல்லாப் பக்கங்களிலும் அழுத்தங்கள் உள்ளன. பலம்பொருந்திய நாடுகளுக்கிடையில் போட்டி உள்ளது. இலங்கை கேந்திர முக்கியத்துவம்மிக்க இடத்தில் அமைந்துள்ளது. எனவே, எல்லா விடயங்களையும் கருத்திற்கொண்டுதான் உரிய முடிவு எடுக்கப்படவேண்டும். அனைத்து நாடுகளுடனான நட்புறவு எமக்கு அவசியம்.

சீனாவுடனான நட்புறவும் எமக்கு முக்கியம். நாம் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. நவம்பரில் வருவதற்கான வாய்ப்பையே வழங்கியுள்ளோம். சுதந்திர நாடு என்ற அடிப்படையில் அதற்கான சுதந்திரம் எமக்கு உள்ளது.

இந்து சமுத்திர வலயம் சமரச வலயமாக இருக்கவேண்டும். இதைப் பிரதான விடயமாகக் கருதியே இலங்கை செயற்படும். இலங்கை அணிசேராக் கொள்கையை கடைப்பிடிக்கும் நாடாகும். இந்தியாவுடனான உறவும் எமக்கு முக்கியம். நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியா உதவியது. மேற்குலக நாடுகளுடனான உறவும் முக்கியம் - என்றார். (எ-44)



# சாந்தனின் மனு விசாரணையில் மேல் நீதிமன்ற நீதிபதி விலகல்

சென்னை, ஒக்.11
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து விடுதலையான சாந்தன், தன்னை இலங்கைக்கு நாடு கடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவை விசாரணை செய்வதில் இருந்து சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி நேற்றுமுன்தினம் விலகியுள்ளார்.

தன்னை நாடு கடத்த வேண்டும் என்று கோரி மத்திய உள்துறை அமைச்சுக்கும், தமிழக அரசாங்கத்துக்கும் உத்தரவிடக் கோரி, அவர் அந்த நீதிப்பேராணை மனு ஊடாகக் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த மனுவை விசாரணை செய்வதில் இருந்து சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி சுந்தர் மோகன் விலகியுள்ளார் என்று இந்திய ஊடகமான "தி ஹிந்து" செய்தி வெளியிட்டுள்ளது.

மனுதாரர் தரப்புச் சட்டத்தரணியான பி. புகழேந்தி ஊடாகத் தாக்கல் செய்த மனுவில், தாம் இலங்கைப் பிரஜை என்றும், உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி தான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளேன் என்றும் சாந்தன் தெரிவித்துள்ளார்.

தாம் சொந்த நாட்டுக்கு நாடு கடத்தப்படும் வரை சிறப்பு முகாமின் எல்லையை விட்டு வெளியேறக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சு, 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது தாயாரின் நலன் கருதி தாம் உடனடியாகஇலங்கை செல்ல விரும்பு கின்றேன் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அளித்த மனுக்கள் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை என்றும் சாந்தன் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



Congratulations

## திருமதி பிரேமவல்லி சற்குணராசா

(அதிபர், B.Ed ஆரம்பக்கல்வி, SLTS - 1)

- ஆரம்பக்கல்வி - யா / நாரந்தனை கணேச வித்தியாலயம்
- தரம் 6 - க.பொ.த. உ /த. யா / வேலணை மத்திய கல்லூரி
- முதல் நியமனத்திகதி - 17.08.1988

**சேவை விபரம்**

| பாடசாலை | பதவி | தொடக்கம் வரை |
|---|---|---|
| யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம் | ஆசிரியர் | - 21.10.1988 - 19.01.1992 |
| கோப்பாய் அசிரியர் கலாசாலை | ஆசிரியர் | - 20.01.1992 - 31.12.1993 |
| யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம் | ஆசிரியர் | - 01.01.1994 - 31.08.1995 |
| யா / தம்பாட்டி அ.த.க. பாடசாலை | ஆசிரியர் | - 01.09.1995 - 06.05.1996 |
| கிளி / தர்மபுரம் இல.1 .அ.த.க. பாடசாலை | ஆசிரியர் | - 07.05.1996 - 26.06.1998 |
| யா / நாரந்தனை கணேச வித்தியாலயம் | ஆசிரியர் | - 27.06.1998 - 25.06.2007 |
| யா / நாரந்தனை கணேச வித்தியாலயம் | பதில் அதிபர் | - 26.06.2007 - 14.09.2008 |
| யா / நாரந்தனை கணேச வித்தியாலயம் | கடமை நிறைவேற்று அதிபர் - | 15.09.2008 - 10.10.2023 |

**10.10.2023** அன்று **35 வருட அரச சேவையிலிருந்து** ஓய்வுபெறுவதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
**யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்**

(cs.26531) (N.1)



# மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 09 . 1950

மறைவு 07 . 10 . 2023

## மகேந்திரன் அஞ்சலிதேவி

உரும்பிராய் வடக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் அஞ்சலிதேவி கடந்த (07.10.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நன்னிதம்பி ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும், நளினா, ரூபனா, சுதனா, மதனா ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராஜா, உமாபாலன், ஞானசந்திரன், தயா ஆகியோரின் அன்பு மாமியும், சிந்தியா, சஞ்சீவ், சுயேவ், சுவேத்தா, நேத்தா, பிரீத்தா, சரீத்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

(cs.26537) (N.1)

தகவல்:
**குடும்பத்தினர்**



# மரண அறிவித்தல்



மலர்வு 1946.11.09

உதிர்வு 2023.10.10

## அமரர் வேலும்மயிலும் வசந்தாதேவி

அல்வாய் மனோகரா 'தெய்வ வாசா' வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. வேலும்மயிலும் வசந்தாதேவி அவர்கள் 10.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி சுந்தரம் வேலும்மயிலும் (J.P) அவர்களின் அன்பு மனைவியும் வே.சுந்தரவேல், கி.தெய்வமதி, வே.கணேசவேல், பா.வசந்தமதி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 11.10.2023 புதன்கிழமை அன்று பி.ப.3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

'தெய்வ வாசா',
சுந்தரவேல் வைத்தியசாலை,
அல்வாய் .

தகவல்
Dr.கணேசவேல் J.P
(0776013616)


## கஞ்சாவுடன் சிறுவன் கைது!

யாழ், ஒக். 11

16 வயதேயான சிறுவன் ஒருவன் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கோப்பாய், நந்தாவில் பகுதியில் வைத்து நேற்று இரவு அந்தச் சிறுவன் கைதுசெய்யப்பட்டுள்ளான். சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 8000 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுவனை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் முன்னெடுப்புகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ம-125)


## University of Jaffna, Sri Lanka.

### Centre for Open and Distance Learning (CODL)

### Certificate Course in Perioperative Care- Batch I Offered by Department of Surgery, Faculty of Medicine

**Admission Criteria**

1. Obtained minimum 3 credit and 3 ordinary passes in G.C.E (O/L) in one or more sitting(s)
   or
2. Completion of NVQ Level 03

**Duration** – 06 Months (Including Practical sessions)

**Course Fee** : Rs.15000.00
**Application Fee** : Rs.500.00

**Selection Criteria** : Candidates will be shortlisted and will be made based on an interview

**Objectives**

- To provide the fundamental knowledge on perioperative care.
- To develop essential skills to employ as a healthcare assistant.
- To prepare the learners to effectively collaborate within healthcare system.
- To prepare the learners as safe practitioners in a healthcare setting.

**How to Apply:**

The application form for this course can be obtained directly from the Centre for Open and Distance Learning of the University of Jaffna or through the website address www.codl.jfn.ac.lk.

Applicants are requested to submit the completed application form along with the copy of the relevant documents (Bank deposit slip, result sheets and employment letters) during office hours of Centre for Open and Distance Learning (08.30 am to 04.15 pm) directly or by registered post to the following address on or before **07.11.2023** (Late submission will not be entertained).
(021-222-3180)- For further details

"Assistant Registrar,
Center for Open and Distance Learning,
University of Jaffna,
P.O Box. 57,
Thirunelvely, Jaffna."

**Payment Method:**
Payment can be made at any branch of the People's Bank in island wide using the bank deposit slip.
Bank- People's Bank
A/C No- 890012520003177
Application Fee- Rs.500.00

**Registrar,**
**University of Jaffna**
**10.10.2023**

(N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் ஆசிரியர்களின்

# ஊதியப் பிரச்சினைகளுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு!

முல்லைத்தீவு, ஒக். 11

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும், அதிபர் மற்றும் நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கும், ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கும் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளன என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி, விவசாயம் மற்றும் சுகாதார அமைச்சு, வடமாகாணசபையின் பிரதம செயலாளர் அலுவலகம், ஆளுநர் அலுவலகம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் ஆதரவுடன் வடமாகாணத்தில் 150 பாடசாலைகளை இலக்குவைத்து தொழில்முனைவோர் பாடசாலை தோட்டக்கலை ஆரம்பிக்கப்பட்டது.

தொழில்முனைவோர் பாடசாலை தோட்டக்கலை வெற்றியடைந்துள்ளதுடன், அதற்கான முயற்சிகள் அமைச்சர் தலைமையில் மல்லாவி மத்திய கல்லூரியை மையமாகக் கொண்டு ஆரம்பமாகி நாளை நிறைவடையவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் விவசாய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய தொழில்நுட்ப அறிவு விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்க ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

இந்தக்கண்காட்சியை பத்தாயிரம் பள்ளி மாணவர்கள் பார்வையிட வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன், அந்தக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை வெற்றியடையச் செய்யும் முகமாக 87 பாடசாலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் அமைச்சரால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ-ம-26,27-100)

## மோ.சைக்கிளில்...

மோட்டார்சைக்கிள் ஒன்று பம்பைமடுப் பகுதியில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதிலேயே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது. இவருடன் பயணித்த மற்றொரு நபர் (இறந்தவரின் மகன்) படுகாயமடைந்த நிலையில், வவுனியா பொதுமருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - கடந்த 48 மணி நேரத்துக்குள் வவுனியாவில் ஏற்பட்ட இரு வேறு விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இரு விபத்துகளும் கட்டாக்காலிகளால் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-18)

## இரண்டாம்...

வேந்தல் உணர்வுபூர்வமாகக் கடைபிடிக்கப்பட்டது. அஞ்சலி நிகழ்வில், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் கனகையா தவராசா, முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் வைத்திலிங்கம் கெங்காதரன் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் தருமபுரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மாலதியின் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரரான மாலதி, 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி யாழ்ப்பாணம், கோப்பாய், கிறேசர் வீதியில் இந்திய இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்தார். அவருடைய நினைவுநாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளாகக் கொண்டாடப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-246-66-113)

## இலங்கையின்...

சர்வதேசப் பொருளாதார மாநாடு மொராக்கோவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார மீட்சிக்கு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புகள் மிகமிக முக்கியமானவை. சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களே அடுத்தகட்ட சீரமைப்புகளுக்கு வழிவகுக்கும். இலங்கை தன் தொடர்ச்சியான சீரமைப்பு நடவடிக்கைகளைக் கைவிடக்கூடாது. ஏனெனில் இலங்கையின் பொருளாதார மீட்சி இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், இதுவரை மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன - என்றுள்ளார்.

(அ-ம)

## பிரம்படிப்...

அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் மேற்கொண்ட படுகொலைகள் வரிசையில் முதல் சம்பவமாக உள்ள, கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் 36ஆவது நினைவஞ்சலி நிகழ்வுகள் நாளை இடம்பெறவுள்ளன.

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியடியில் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் அனுசரணையில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, நினைவுத் தூபிக்கு மலர்மாலைகள் அணிவித்து, அதனைத் தொடர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படும். தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெறும் என்று பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(அ-ம-66)

## முல்லை...

காலவரையறையின்றிய தொடர் நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி தெரிவித்தார்.

கொழும்பு உச்ச நீதிமன்றத்துக்கு முன்பாக, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்த சட்டத்தரணிகள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தின்போது அரசாங்கத்திடமிருந்து தீர்வொன்றை எதிர்பார்த்து ஒரு வாரகால அவகாசத்தை சட்டத்தரணிகள் வழங்கியுள்ளனர். இதற்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால் போராட்ட வடிவங்கள் மாற்றப்பட்டு தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என்று தெரியவருகின்றது. இந்த நிலையிலேயே முல்லைத்தீவு சட்டத்தரணிகள் தங்களின் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டு பணிக்குத் திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-19,113)

## தென்னையிலிருந்து...

திகதி தென்னையிலிருந்து வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(அ-ம-26)



# பொலிஸ் அதிகாரி விபத்தில் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 11

தம்புள்ளயில் மோட்டார்சைக்கிள் ஒன்றும், டிப்பர் வாகனமொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார். தம்புள்ளயைச் சேர்ந்த சாந்திமா ரணசிங்க (வயது-24) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

(அ-ம-26-100)

## சென்.பற்றிக்ஸ்...



யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து கொழும்பு சாஹிராக் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் மூலம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி காலிறுதியாட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பலம் பொருந்திய மட்டக்களப்பு, ஏறாவூர் அலிஹார் தேசியப் பாடசாலையை 2:0 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தியது.

2022ஆம் ஆண்டிலும் 20 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியே கிண்ணம் வென்றது. இந்த வருடத்திலும் சம்பியனானதன் மூலம் 20 வயதுப் பிரிவில் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் கிண்ணம் வென்ற ஒரே பாடசாலை அணி என்ற வரலாற்றுச் சாதனையையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி படைத்தது.

(அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயைக் கண்டறிய நாடு முழுவதும் வசதிகள்

## தேசிய புற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 11**

**சுய பரிசோதனைகளை மேற்கொண்டு மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்கினால் முழுமையாக சுகப்படுத்த முடியும். இதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள நாடளாவிய ரீதியில் அரச மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை நிபுணர்களின்கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.**

- இவ்வாறு தேசிய புற்றுநோய்த் தடுப்பு வேலைத்திட்டத்தின் மருத்துவ நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்படும் "101 கலந்துரையாடல்" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே 80சதவீதம் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

30 வயதுக்கு முன்னதாக முதல் குழந்தை பெற்றிருக்காதவர்களுக்கும் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன.

11வயதுக்கு முன்னதாக பூப்படைதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாற்றங்கள் 55 வயதுக்குப் பின்னரும் காணப்படுதல் என்பனவும் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்களாகக் காணப்படுகின்றன.

20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சுயமாக புற்றுநோய் பரிசோதனையைச் செய்துகொள்வது சிறந்தாகும்.

அறிகுறிகள் தெரியவரும் பட்சத்தில் சுகவனிதையர் சிகிச்சைக்கும் செல்ல முடியும்.

அதற்கு மேலதிகமாக, நாராஹேன்பிட்டி, இரத்தினபுரி, மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகியபகுதிகளில்5 புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன -என்றார். (ச-27)



# வருமானப்பரிசோதகர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

வடக்கு மாகாண வருமானப் பரிசோதகர்கள் சங்க அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்.பொதுநூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் பங்கேற்றார்.

குறித்த சங்கத்தின் முதலாவது நிர்வாகசபையின் தலைவராக ச.போல்தர்சாந், செயலாளராக கோ.ஜெகஜீவன், பொருளாளராக திருமதி.ஜோ.ஆரினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-66)

# தேசியமட்ட சதுரங்கப்போட்டி மன்னாரில் வீரர்கள் தெரிவு

மன்னார், ஒக். 11

தேசியமட்டத்தில் இடம்பெறவுள்ள சதுரங்க சுற்றுப்போட்டிக்கான வீரர்களைத் தெரிவுசெய்யும் போட்டி யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் அனுசரணையில் மன்னார் சதுரங்க சம்மேளன ஒழுங்கமைப்பில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 80 க்கும் மேற்பட்ட வர்கள் குறித்த போட்டியில் பங்கேற்றனர்.

ஐந்து சுற்றுகளாக இடம்பெற்ற நிலையில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் சதுரங்க சுற்றுப்போட்டியில் மன்னார் மாவட்ட சதுரங்க சம்மேளனத் தலைவர் குபெர், அருட்சகோதரர் சத்தியராஜ், மன்னார் விளையாட்டு அதிகாரி பிரின்ஸ் முசலிப் பிரதேச விளையாட்டு அதிகாரி ஜெரமி மற்றும் மன்னார் மாவட்ட சதுரங்க சம்மேளன உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (ச-213)


காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் இருந்து
100 m இல் 8 பரப்பு காணி விற்பனைக்குள்ளது.
4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
1 துண்டின் மொத்த விலை (2 பரப்பு) ரூபா 14,000,000
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பிற்கு சிறந்த காணி
பதிவுகளுக்கு முந்துங்கள்
தொடர்பு : 074 3161418, 077 4118851, 077 6714556
(CS 26536) M-1

வேலையாள் தேவை

ஹாட்வெயர் அன்ட் ரிம்பர் (மரம்)
கடைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
(ஆண்)
பலாலி வீதி, கோண்டாவில்,
C.T.B டிப்போ அருகாமை
தொடர்பு - 077 558 9254
(CS 52457) (AK.1)

WANTED
Technical Officer

Request applications from qualified persons for the above position
Qualification & Experience
1. NCT(Civil) or an equivalent qualification
2. Minimum 5 years of experience in construction projects
3. Ability to work with minimum supervision
4. Willingness to work long hours
5. Be a male below 40 years of age
The selected candidate should be ready to work in any construction site of the company
An attractive remuneration package will be offered to the right candidate.
If the above position is of interest to you, please forward a detailed resume with contact details of two non-related referees to reach within ten days of this advertisement.
E-mail: - keshv.mdnch@gmail.com
Contact Number: - 077 731 8740

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பதிவு இல - V/260
பகிரங்க மூடிய கூறுவிலை

வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான லொறி விற்பனை செய்யப்படவுள்ளது. அசோக் லேலன் லொறி இல 68 - 0196, பார்வையிடும் இடம் - வவுனியா ப.நோ.கூ.சங்க தலைமைப்பணிமனை, அலுவலக நேரம் காலை 8.30- 4.30. பார்வையிடும் திகதி 12.10.2023 - 25.10.2023 வரை. மேற்படி லொறியை கொள்வனவு செய்ய விரும்புவர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1000.00 (ஓராயிரம்) ஐ பொதுமுகாமையாளர், வ.ப.நோ.கூ.சங்கத்திற்கு காசுக்கட்டளையாக அனுப்ப முடியும்.
சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 27.10.2023 திகதிக்கு முன் தலைவர், வ.ப.நோ.கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிடவும். தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அ.அ.இல, தொலைபேசி இலக்கம், முகவரி மற்றும் கூறுவிலை என்பன உள்ளடங்கும் வகையில் இருத்தல் வேண்டும்.
மூடிய கூறுவிலைகள் 01.11.2023 ஆம் திகதி 12.00 மணிக்கு நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்வித்தாரர்கள் சமுகமளிக்க முடியும். இயக்குனர் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

024-2222384
077-6745306
077-0697806

கூட்டுறவு சேவையிலுள்ள தலைவர்,
வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், வவுனியா.
CS 25814-M-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.